30th January 1961]

கிடையாது. ஒரு டிபார்ட்மென்ட் இன்னொரு டிபார்ட்மென்டைக் கேட்டிருக்கிறார்கள். அந்த டிபார்ட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தகவல்தான் எஃ்விடத்தில் இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால், கனம் அங்கத்தினர் கேட்கும் மற்ற விவரங்களுக்கும் பதில் சொல்கிறேன்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF INFORMATION *RE* SITTINGS OF THE HOUSE.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : It was decided previously that the House would sit both in the morning and evening on 28th instant. Some of us would not come in the morning of 28th instant. We wanted to participate in the discussion in the evening. But when we came a bit late, we found to our disappointment that the House had adjourned at 1-30 p.m. for the day. I want to know, from you, Mr. Speaker whether the House could be adjourned all of a sudden just to suit the whims and fancies of some hon. Members of this House.

MR. SPEAKER : The hon. member should know that the House is the supreme authority to decide. If an hon. Member were to move a motion in the House and the House approves it, what can the Speaker do? I have to carry out the decision of the House. If the hon. Member did not come in the morning, it is not my fault. He could have come in the morning and taken part in the debate. What has been done is perfectly in order and the House as the supreme body has decided.

III.—POINT OF INFORMATION *RE* A POSTPONED QUESTION.

SRI K. VINAYAKAM : On a point of information, Sir. There was a starred question in my name on 28th January 1961 and I requested that it might be postponed to to-day. But I do not find the question in to-day's list of questions nor is the concerned Minister present in the House. May I know whether the question would be taken up when the concerned Minister is present or when would it be taken up?

MR. SPEAKER : It will be taken up to-morrow.

IV.—ADJOURNMENT MOTION *RE* FAILURE OF THE POLICE TO PROTECT THE CITIZENS OF TIRUCHIRAPPALLI AGAINST ACTS OF ROWDYISM.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri M. Kalyanasundaram under Rule 42. Before I allow Sri Kalyanasundaram to go further I should get from the Hon. Minister all the relevant facts.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move that the House be adjourned to discuss the following matter . . .

MR. SPEAKER : If the hon. Member moves, then the matter will be before the House. Then I will be in difficulty.

SRI M. KALYANASUNDARAM : I must state the matter because the Hon. Minister may not be aware of the same. திருச்சி நல்ரத்திலே 25-ந் தேதியன்று பகல் நேரத்தில் சில ரௌடிகள் அரிவாள் முதலிய ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு, கடைகளைச் சூறையடித்து, ரயில்வே ஸ்டேஷன் மீது கூட கற்களை வீசி, ரயில்வே சிப்பந்திகளையும், ஸ்டேஷன் மாஸ்டரையும், போர்டர்களையும் பயமுறுத்தி இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், இதற்கு முன்பு நடந்த க்ரிமினல் வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருசிலரை, அவர்களுக்கு எதிராக சாட்சியம் கூறி, போலீசுக்குக் காட்டிக் கொடுத்த குற்றத்திற்காக இப்படிப் பயமுறுத்தி இருக்கிறார்கள்.

MR. SPEAKER : The hon. Member is making a speech.

SRI M. KALYANASUNDARAM : விவரங்கள் கொடுத்தால் தானே கனம் அமைச்சர் விசாரிக்க முடியும்? அதனால்தான் சொல்கிறேன். போலீசார் அந்த நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும்போது பாதுகாப்பு கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல; அதன் பிறகு கூட அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமலிருப்பதாக அறிகிறேன். போலீசாரால் கண்டுபிடிக்க முடியாமல் தப்பிக் கொண்டு போவதற்கு அவர்கள் என்ன அவ்வளவு சாமர்த்திய சாலிகளா? போலீசார் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கனம் அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் திருச்சியில் 26-ந் தேதியன்று இருந்தேன். இந்தச் சம்பவம் பற்றி போலீசாரிடத்தில் விசாரித்தேன். அவர்கள் இதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். சில பேர்களை 'அரெஸ்ட்' செய்திருப்பதாகக் கூடத் தெரிகிறது. அது பத்திரிகையில் கூட வந்திருப்பதைக் கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள். ஆகையால், இதுபற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது, இது அவசரப் பிரேரணைக்குத் தகுந்ததல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : கோர்ட்டில் இதைப்பற்றி கேஸ் இருந்தால் 'டிஸ்கஸ்' பண்ண முடியாது.

SRI M. KALYANASUNDARAM : யார் குற்றவாளி என்று சொல்லவில்லை. எனவே, நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The Police are taking necessary action in the matter. So I rule it out of order.